www.Padasalai.Net www.TrbTnpsc.com

**அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–600 006**

**முன்னிலை : ந.லதா,**
**இயக்குநர்**

**ந.க.எண்.** 012426 / எப் 1 / 2024 **நாள் :** 23.09.2024

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – 2024 –2025 –ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணவர்கள் பெயர்ப் பட்டியல் EMIS விவரங்களின் அடிப்படையில் தயாரித்தல் – மாணவர்கள் விவரங்களை பதிவேற்றம் செய்தல் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்துதல் குறித்து அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:** அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறை, நாள்.30.08.2024.

*****

**ஆணை :**

2024 –2025 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிப்பதற்கு, EMIS–ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மாணவர்களின் தகவல்களுள், கீழ்க்காணும் தகவல்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

1. மாணாக்கரின் பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
2. பிறந்த தேதி
3. புகைப்படம் (jpeg, jpg)
4. பாலினம்
5. வகைப்பாடு (சாதி அடிப்படையிலான வகைப்பாடு)
6. மதம்
7. மாணாக்கரின் பெற்றோர் / பாதுகாவலர் பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
8. மாற்றுத் திறனாளி வகை மற்றும் சலுகைகள்
9. கைபேசி எண்
10. பாடத் தொகுப்பு – Group code (+1 **மாணவர்களுக்கு மட்டும்)**
11. பயிற்று மொழி (Medium of instruction)
12. மாணாக்கரின் வீட்டு முகவரி
13. பெற்றோரின் ஆண்டு வருமானம்

பள்ளி மாணவர்களின் மேற்குறிப்பிட்ட தகவல்களைப் பயன்படுத்தியே, 2024–2025–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட உள்ளதால், அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், 05.09.2024 **முதல்** 18.09.2024 வரையிலான நாட்களில் EMIS –ல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password– ஐ



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பயன்படுத்தி, EMIS வலைதளத்திற்கு சென்று தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களது மேற்குறிப்பிட்ட விவரங்கள் சரியாக உள்ளதா என்பதை சரிபார்த்து, திருத்தங்கள் இருப்பின் உடன் திருத்தத்தினை மேற்கொள்வதற்கும் பார்வையில் காணும் செயல்முறையின் வாயிலாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித்தலைமையாசிரியர்கள், **24.09.2024 (செவ்வாய் கிழமை) முதல் 15.10.2024 (செவ்வாய் கிழமை) வரையிலான நாட்களில்** அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்திற்குச் (www.dge.tn.gov.in) சென்று, கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி, மாணாக்கரது விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யவேண்டும்.

**பள்ளியினை பதிவு செய்தல்**

1. தலைமையாசிரியர்கள் மேற்குறிப்பிட்ட நாட்களில் அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்திற்குச் (www.dge.tn.gov.in) சென்று **Online Portal for School and Educational Offices** என்ற வாசகத்தினை click செய்ய வேண்டும்.

2. **கடந்த ஆண்டு அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தில் பள்ளி விவரங்களை பதிவு செய்த பள்ளிகள்,User login ஐ பயன்படுத்தி பள்ளியின் பெயர்களில் திருத்தம் இருப்பின், அத்திருத்தங்களை மட்டும் மேற்கொள்ளலாம்.**

   புதிய பள்ளிகள்:–

3. **ஏற்கனவே பள்ளியினை அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தில் பதிவு செய்யாத புதிய பள்ளிகள் மட்டும்** School registration என்ற வாசகத்தினை click செய்து தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள UDISE Code (EMIS User ID) மற்றும் Password–ஐ பயன்படுத்தி, தங்களது பள்ளியின் பெயர், பள்ளியின் வகை (Management), மின்னஞ்சல் முகவரி, மாவட்டம் போன்ற விவரங்களை பதிவு செய்யவேண்டும்.

4. **School registration–ல் உள்ள பள்ளியின் பெயரே மதிப்பெண் சான்றிதழில் அச்சிடப்படும் என்பதால் பள்ளியின் பெயரை ஆங்கிலத்திலும், தமிழிலும் சரியாக பதிவேற்றம் செய்யவேண்டும்.** பள்ளியின் வகையினையும் (Management) சரியாக குறிப்பிடவேண்டும்.

   குறிப்பு :

   **School Registration முடிந்த பின்பு, District Level–ல் முதன்மைக் கல்வி அலுவலரால் Approval வழங்கிட வேண்டும். அதன்பின்னரே, அப்பள்ளி மாணாக்கர் விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய இயலும்.**

**பெயர்ப் பட்டியல் தயாரித்தல்**

1. பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டில் பயிலும் மாணவர்களது விவரங்களை பதிவு செய்ய அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்திற்குச் (www.dge.tn.gov.in) சென்று **Online Portal for School and Educational Offices** என்ற வாசகத்தினை click செய்ய வேண்டும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

2. பிறகு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள UDISE Code ( User ID) மற்றும் Password–ஐ பயன்படுத்தி Log in செய்ய வேண்டும்.

3. Log in செய்த பிறகு திரையில் தோன்றும் Pull Emis Data என்ற வாசகத்தை click செய்து, தங்களது பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு / +1 மாணவர்களது விவரங்களை EMIS–ல் இருந்து Pull செய்ய வேண்டும்.

4. Log in செய்த பிறகு திரையில் உள்ள Form Fill up HSE – XI என்ற வாசகத்தை click செய்து தங்கள் பள்ளியில் மேல்நிலை முதலாமாண்டு பயிலும் மாணாக்கரின் விவரத்தினை Apply என்பதை click செய்து ஒவ்வொரு மாணாக்கருக்கும் தனித்தனியே சரிபார்க்கவேண்டும்.

5. இதே போன்று Form Fill up SSLC என்ற வாசகத்தை click செய்து தங்கள் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணாக்கரின் விவரத்தினை Apply என்பதை click செய்து ஒவ்வொரு மாணாக்கருக்கும் தனித்தனியே சரிபார்க்கவேண்டும்.

6. மேலும், மாணவரின் பயிற்று மொழி, மாற்றுத் திறனாளித் தேர்வர்களது குறைபாட்டின் தன்மை, விருப்ப மொழிப்பாடம் (பத்தாம் வகுப்பிற்கு மட்டும்) அவர்கள் தேர்வெழுத கோரும் சலுகைகள் போன்ற கூடுதல் விவரங்களை சரியாக பதிவேற்றம் செய்யவேண்டும். சலுகை கோரும் மாற்றுத்திறனாளி மாணாக்கரது மாற்றுத்திறனாளி அடையாள அட்டை அல்லது உரிய மருத்துவரிடம் பெற்ற மருத்துவச்சான்றினை Scan செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். **மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்கு தேர்வெழுத வழங்கப்படும் சலுகைகள் குறித்த அரசாணைகளை** அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்திற்குச் (www.dge.tn.gov.in) சென்று காணலாம்.

7. அரசாணை (நிலை) எண். 232, பள்ளிக் கல்வித் (ERT) துறை, நாள்.08.11.2017 –ன்படி **வெளி மாநிலங்களில்** இருந்து வேலை நிமித்தமாகவோ அல்லது பணி மாறுதலிலோ 9 ஆம் வகுப்பு அல்லது 10 ஆம் வகுப்பில் தமிழை தாய்மொழியாக கொண்டிராத மாணவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் சேரும் மாணவர்களுக்கு மட்டும் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் பகுதி – I இல் தமிழ் மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்களிக்க பள்ளிக் கல்வி இயக்குநர் / மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநர் வழியாக மாணவர்களின் விவரங்கள் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8. அரசாணை (நிலை) எண். 37, பள்ளிக் கல்வித் (கஆப) துறை, நாள்.06.03.2018 –ன்படி **தமிழகத்திலேயே** பிற பாடத்திட்டத்தில் உதாரணத்திற்கு சி.பி.எஸ்.இ மற்றும் ஐ.சி.எஸ்.இ போன்ற பாடத்திட்டத்தில் பயின்று தமிழ்மாநிலப் பாடத்திட்டத்திற்கு (State Board) நேரடியாக 9 ஆம் வகுப்பு 10 ஆம் வகுப்பில் சேர்கின்ற மாணவர்களுக்கு மட்டும் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் பகுதி – I இல் தமிழ் மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து 2023 – 2024 –ம் கல்வியாண்டு வரையில் விலக்களிக்கப்பட்டது. **தற்போது,2024–2025 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதும் அனைத்து மாணவர்களும் பகுதி I–ல் தமிழ் மொழியினை மட்டுமே மொழிப்பாடமாக எழுத அனுமதிக்கப்படுவர்.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

9. **தமிழ் மற்றும் ஆங்கிலம் அல்லாத பிற மொழிகளை தாய்மொழியாகக் கொண்ட பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் பின்வரும் மொழிப்பாடத்தை <u>விருப்ப மொழிப்பாடமாக</u> பகுதி IV–ல் எழுத அனுமதிக்கப்படுவர். (Telugu / Malayalam / Kannada / Urdu / Hindi / Sanskrit / Arabic / French / Gujarathi)**

10. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழி தவிர இதர பயிற்று மொழிகளில் (Other than Tamil Medium) பயிலும் BC/BCM பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களது (தேர்வுக்கட்டண விலக்கு கோருபவர்கள் மட்டும்) பெற்றோரின் ஆண்டு வருமானத்தினை (ரூ.2,50,000/– க்கு குறைவாக உள்ளதா என்பதை) தேர்வு செய்யவேண்டும்.

11. மாணவர்களது அனைத்து விவரங்களையும் பதிவேற்றம் செய்த பின்னர், உறுதிமொழிப்படிவம் (Declaration form) மற்றும் மாணவரின் விவரங்கள் அடங்கிய பட்டியலை பதிவிறக்கம் செய்யவேண்டும்.

**<u>உறுதி மொழிப் படிவத்தில் மாணவர்களது / மாணவர்களின் பெற்றோர்களது கையொப்பம் பெறுதல் மற்றும் பெயர்பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளுதல்</u>**

1. உறுதிமொழி படிவத்தினை பதிவிறக்கம் செய்த பின்பு, உறுதிமொழிப் படிவத்தில் பூர்த்தி செய்துள்ள மாணவரின் பெயர், பிறந்த தேதி, புகைப்படம். மாணவரது பெற்றோரின் பெயர் (தாய்/ தந்தை/ பாதுகாவலர்) உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் சரிபார்க்கச் செய்து, அப்படிவத்தில் பள்ளி மாணவரின் கையெழுத்தினையும், பெற்றோரின் கையெழுத்தினையும் பெறுதல் வேண்டும். அச்சமயம் தேர்வுக் கட்டண விலக்கு பெற்ற மாணவர்கள் தவிர மற்ற மாணவர்களிடம் தேர்வுக் கட்டணத்தினை பெற்றுக் கொள்ளவேண்டும்.

2. **தேர்வெழுத சலுகை கோரும் மாற்றுத் திறனாளி மாணவர்களின் பெற்றோர்கள் பள்ளிக்கு வருகை தரும்பொழுது,** இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை (இணைப்பு–1 ) வழங்கி, மாணவர்கள் / பெற்றோர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டையின் நகல் அல்லது மருத்துவக் குழுவின் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றை பள்ளித் தலைமையாசிரியர் பெற்றுக் கொள்ள வேண்டும். (மருத்துவ சான்றிதழில் நோயின் தன்மை மற்றும் மாணவருக்கு வழங்க வேண்டிய சலுகை பற்றிய விவரம் ஆகியவை கண்டிப்பாக இடம் பெற்றிருக்க வேண்டும்). மாற்றுத் திறனாளி மாணவர்கள் விண்ணப்பத்தில் கோரியுள்ள சலுகைகளை மட்டுமே இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு மாணவரின் உறுதிமொழிப் படிவத்திலும், சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியரும், பள்ளித் தலைமையாசிரியரும் அனைத்து விவரங்களும் சரியாக உள்ளதா என்பதனை ஒருமுறைக்கு இருமுறை உறுதி செய்து கொண்டு உறுதிமொழிப் படிவத்தில் கையொப்பமிட வேண்டும்.

4. தமிழில் உள்ள மாணவர்களின் பெயர், பெற்றோர்களின் பெயர் மற்றும் பள்ளியின் பெயரை திருத்தம் செய்ய வேண்டுமெனில், **ஏற்கனவே உள்ள பெயரை முழுவதும் நீக்கம் (Delete) செய்த பின்பு, அரசுத் தேர்வுகள் இணையதளத்தில் உள்ள Key board– ஐ தேர்வு செய்து, ஒவ்வொரு எழுத்தாக click செய்யவேண்டும்.**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

5. பெயர்ப்பட்டியலின் அடிப்படையிலேயே மதிப்பெண் சான்றிதழ் அச்சிடப்படும் என்பதால், இப்பணியினை தலைமையாசிரியர் தமது நேரடி கவனத்தில் மிகுந்த பொறுப்புடனும், சிரத்தையுடனும் மேற்கொள்ள வேண்டும்.

6. **பதிவேற்றம் செய்யப்பட்ட மாணாக்கரின் விவரங்களில் தவறுகள் ஏதும் ஏற்படின் சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியர் மற்றும் பள்ளித் தலைமையாசிரியரே முழுப் பொறுப்பேற்க நேரிடும் என்பதுடன், அவர்கள் மீது துறை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்..**

பள்ளித் தலைமையாசிரியர்கள், மேற்குறிப்பிட்டவாறு மாற்றுத் திறனாளி மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், **மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டையின் நகல் அல்லது மருத்துவக் குழுவின் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றை** பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்கள் என தனித்தனியாகப் பிரித்து, சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் **25.10.2024–க்குள்** ஒப்படைக்கவேண்டும்.

**<u>தேர்வுக் கட்டணங்கள்</u>**

**பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கான கட்டணம்**

| வ. எ | மாணவர் வகை | தேர்வுக் கட்டணம் | மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | சேவைக் கட்டணம் | மொத்தம் (ஒரு மாணவருக்கு) |
|---|---|---|---|---|---|
| 1 | பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் அனைத்து பள்ளி மாணவர்கள் | ரூ.100/– | ரூ.10/– | ரூ.5/ | ரூ.115/– |

**மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான கட்டணம்**

| வ.எ | மாணவர் வகை | தேர்வுக் கட்டணம் | மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | சேவைக் கட்டணம் | மொத்தம் (ஒரு மாணவருக்கு) |
|---|---|---|---|---|---|
| 1 | செய்முறை பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.200/– | ரூ.20/– | ரூ.5/– | ரூ.225/– |
| 2 | செய்முறை இல்லாத பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.150/– | ரூ.20/– | ரூ.5/– | ரூ.175/– |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**<u>தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியானோர்:</u>**

I. தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு (Tamil Medium) தேர்வெழுதும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

II. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழி தவிர இதர பயிற்று மொழிகளில் (Other than Tamil Medium) பயிலும் பின்வரும் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ) | SC/SCA/ST மற்றும் SC Converts (SS) | பெற்றோருக்கான வருமானத்திற்கு உச்சவரம்பு ஏதும் இல்லை. |
| ஆ) | MBC/DC | |
| இ) | BC/BCM | – பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,50,000/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு) மிகாமல் இருப்பவர்களுக்கு மட்டும் |

III. அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் பார்வை குறைபாடுடைய மற்றும் செவித்திறன் / பேச்சுத் திறன் குறைபாடுடைய மாணவர்கள்.

**<u>மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ–இந்தியப் பள்ளிகள்:</u>**

மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்பு / பதினோராம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் மாணவர்கள் தேர்வுக் கட்டண விலக்கு பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்.

**<u>தேர்வு க் கட்டணம் செலுத்துதல்</u>**

1. மேற்குறிப்பிட்டவாறு தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு / பதினோராம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களது விவரங்களையும் பதிவேற்றம் செய்தபின்னர், தேர்வுக்கட்டணம் செலுத்தவேண்டிய பள்ளி மாணாக்கரிடமிருந்து மட்டும் (தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களைத் தவிர்த்து) தேர்வுக்கட்டணத் தொகையினை பெற வேண்டும்,

2. பெறப்பட்ட தேர்வுக்கட்டணத்தை Log in செய்த பிறகு திரையின் வலது புறத்தில் உள்ள Notification என்ற வாசகத்திற்கு கீழே உள்ள Payment of HSE – XI / Payment of SSLC என்ற வாசகத்தை click செய்து Credit Card / Debit Card / Net Banking பயன்படுத்தி ஆன்லைன் வாயிலாக பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு மாணவர்களின் தேர்வுக்கட்டணத்தினை 25.10.2024 **–க்குள்** செலுத்தவேண்டும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**குறிப்பு: தேர்வுக்கட்டணம் செலுத்தும் முன்பு மாணவர்களின் விவரங்களில் திருத்தம் ஏதேனும் உள்ளதா என்பதை நன்கு உறுதி செய்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், தேர்வுக்கட்டணம் செலுத்திய பின்பு மாணவர்களின் விவரங்களில் திருத்தங்களை மேற்கொள்ள இயலாது.**

**TML கட்டணம்:-**

அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களும் 25.10.2024**-க்குள்** 2024-2025 கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்விற்கான தேர்வு முடிவுகள் அடங்கிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) **ஆன்லைன் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான கட்டணம் ரூ.300/-ஐ** கீழ்காணும் வழிமுறைகளை பின்பற்றி செலுத்த வேண்டும். **அனைத்துப் பள்ளிகளும் (எந்த ஒரு பள்ளியும் விலக்கு இல்லாமல்) இக்கட்டணத்தினை செலுத்தவேண்டும்.**

1. www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று Log in செய்த பிறகு திரையின் வலது புறத்தில் உள்ள Notification என்ற வாசகத்திற்கு கீழே உள்ள TML Payment of HSE – XI / TML Payment of SSLC என்ற வாசகத்தை click செய்து Credit Card / Debit Card / Net Banking பயன்படுத்தி ஆன்லைன் வாயிலாக செலுத்தவேண்டும்.

இணையதளம் வாயிலாக மாணவர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்தல் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்துதல் தொடர்பான சந்தேகங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

- **தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் :**
  1) 94983 83076
  2) 94983 83075

**இணைப்பு:**

தேர்வெழுத சலுகை கோரும் படிவம்

**ஒம்/-**
**இயக்குநர்**

**பெறுநர்**

1. அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் (முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
4. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

**நகல்:**

1. மாநில திட்ட இயக்குநர்,ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம்- தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம்.
3. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம்.

} தகவலுக்காக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# படிவம் 1

## பத்தாம் வகுப்பு /மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வு

## மாற்றுத் திறனாளி பள்ளி மாணவர்கள் – சலுகை கோரும் விண்ணப்பப் படிவம்

| | | |
|---|---|---|
| 1. | பெயர் மற்றும் பிறந்த தேதி | |
| 2. | வகுப்பு | |
| 3. | பள்ளியின் எண் மற்றும் பெயர் | |
| 4. | தேர்வு மைய எண் மற்றும் பெயர் | |
| 5. | பாடத் தொகுப்பு எண் (+1 மட்டும்) | |
| 6. | தேர்வெழுதும் பாடங்கள் | |
| 7. | பயிற்று மொழி | |
| 8. | நோயின் தன்மை | |
| 9. | கோரப்படும் சலுகை | |
| 10. | மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டை அல்லது அசல் மருத்துவச் சான்று இணைக்கப்பட்டுள்ளதா? | |

| | | |
|---|---|---|
| மாணவரின் கையொப்பம் | மாணவரின் பெற்றோரின் கையொப்பம் | மாணவரின் வகுப்பு ஆசிரியர் கையொப்பம். |

தலைமையாசிரியர் சான்றொப்பம்

( பள்ளி முத்திரையுடன் )

குறிப்பு: இவ்விண்ணப்பத்துடன் மாற்றுத் திறனாளி அடையாள அட்டை நகல் அல்லது மருத்துவ சான்று கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும் (இரண்டு நகல்) மருத்துவச் சான்று இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.